# கிருபையுள்ள வார்த்தை

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22


| Vol - 20 | May மே | 2019 |
|---|---|---|
| ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/- |






கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| விசுவாசத்தின் இயல்பு | 3 |
| அடிப்படை கிறிஸ்தவ... | 7 |
| சிறுவர்பகுதி | 8 |
| கேள்வி பதில் பகுதி | 10 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. ஷியாமிலன் கார்த்திக்,** B.Sc.,

**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L

அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**

**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 6:45 மணி**

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**


## வேத ஆராய்ச்சிக்கான புதுமையான அணுகுமுறைகள்



- தனிப்பட்ட வேத ஆராய்ச்சி செய்பவர்களுக்கான ஒரு அருமையான புத்தகம் !
- பாடங்களுடன், பயிற்சி திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது


விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

**கிருபையுள்ள வார்த்தை**

**விசுவாசத்தையும், தைரியத்தையும் உண்டாக்கும் தெய்வீக வார்த்தை**

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 99**

ஆசிரியர் உரை

# விசுவாசத்தின் இயல்பு

P.C. பிலேமோன் ராஜா



**பிரியமானவர்களே! உங்கள் அனைவருக்கும் இறை மைந்தன் இயேசுகிறிஸ்துவின் ஒப்பற்ற நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்களை தெரிவிப்பதில் அகமகிழ்கிறேன்.**

இம்மாதம் நம்முடைய தியானத்திற்காக எபிரெயர் புத்தகத்திலிருந்து விசுவாசத்தின் இயல்பினைப்பற்றி வேதாகமத்தின் துணையுடன் ஆராய்வோம்! இந்த நிருபம் யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறின யூதர்களுக்கு எழுதப்பட்டது. அவர்களது தாய்மொழி எபிரெயம் என்பதால், அவர்கள் எபிரெயர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இந்த புத்தகத்தின் ஆசிரியர், இந்த கடிதத்தை பெற்றுக்கொண்டவர்களின் ஆவிக்குரிய வாழ்வானது மரித்துபோகும் நிலையில் இருந்தபொழுது, அவர்களை, ஜீவனை நோக்கி திருப்ப அவர்களுக்கான சில சவால்களை முன்வைக்கிறார். ஏனெனில், அவர்கள் தேவனை விட்டு விலகி, விழுந்து போகும் மரண அபாயத்திலிருந்தனர் (10ம் அதிகாரம்). ஆகையால் புறம்பே விழுந்துபோனால் என்ன நடைபெறும் என்ற எச்சரிக்கையுடன் எழுதுகிறார் **(எபி 10:26–31).**

மேலும், அவர்களது விடாமுயற்சியை பாராட்டி, அவர்களுக்குள் இருந்த தன்னம்பிக்கை வெளிக்கொண்டு வந்து, தேவனை நோக்கி விசுவாச நடையை தொடர்ந்து நடக்கும்படி ஊக்கப்படுத்துகிறார் **(எபி 10:39).** ஏனெனில், அவர்கள் நித்தியத்திற்கும் இரட்சிக்கபட்டவர்களாய் இருக்க, விழுந்துபோவதற்கான காரணங்களை தவிர்க்க வேண்டியதாயிருந்தது.

நாம் விசுவாச (கிறிஸ்தவ) வாழ்விலிருந்து விலகாதபடி, நமக்குள் விசுவாசம் அவசியமாயிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரின் முழுமையான இரட்சிப்புக்கு (விடுதலைக்கு) விசுவாசம் என்பது ஒரு திறவுகோல் போன்றது. ஆகையால், விசுவாசம் என்றால் என்ன? அது எதை அர்த்தப்படுத்துகிறது என்று செயல் விளக்கப்படுத்துகிறார்.

எனவே, நாம் இந்த மாதம், விசுவாசத்தின் இயல்பைப் பற்றி பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் வேதாகமம் என்ன கூறுகிறது என்ன என்று கற்றுக்கொள்வோமாக.

## 1. விசுவாசம் என்பது, உடல் ரீதியாகக் காண இயலாதவற்றை ஏற்றுக்கொள்கிறது.

விசுவாசம் என்பது உடல் ரீதியான புலன்களைக் கொண்டு அனுபவப்பட இயலாதவற்றை, அதாவது நம் கண்களால் காண முடியாவிடினும் உண்மையானவைகளை உறுதியுடன் ஏற்றுக்கொள்வதை உள்ளடக்கியதாகும் **எபி 11:1,2** "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள்."

விசுவாசம் என்பது காணப்படாதவற்றை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும், அதுவே விசுவாசம் பற்றிய எல்லாமுமாக இருப்பதில்லை. ஆவிக்குரிய உண்மை நிலைகளை ஒருவர் தமது உடல் ரீதியான உணர்வுகளைக் கொண்டு உண்மையாகக் காண இயலாதிருந்தாலும், அவைகள் இருப்பது உண்மையே!

**எபி 11:3** "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்."

உலகம் தேவ வார்த்தையினால் உண்டானது என்றும் காணப்படுகிறவைகள்: தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்று அறிந்திருக்கிறோம். இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? உண்டான போது நாம் அங்கு இருக்கவில்லை. ஆனால் பரலோகத்தின் பரிசுத்த கடவுளே உலகை படைத்தார் என்று விசுவாசம் கொண்டிருக்கிறோம்.

உடல் உணர்வுகளின் வழியாக நாம் அறிய இயலாதவற்றை, ஒரு உண்மை என்ற வகையில் விசுவாசத்தினால் நாம் புரிந்து கொள்கிறோம்.

விசுவாசத்தின் இயல்புக்கு சாட்சியங்கள் என்ற வகையில், வேதாகமத்திலிருந்து மாபெரும் உதாரணங்களின் பட்டியல் ஒன்றைக் காண்கிறோம். இந்த விசுவாசத்தை செயலில் காண்பித்த, அதாவது தங்கள் வாழ்வில் வெளிப்படுத்திய விசுவாச செயல் வீரர்களை கொண்டு, விசுவாசம் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? மற்றும் அது எதற்கானது? என்பதை அறிய முயலுவோம்.

## 2. விசவாசம் என்பது, நாம் தேவனைப் பிரியப்படுத்தும்படி செய்கிறது:

**எபி 11:4–7** "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக் கொண்ட படியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்திரவாளியானான்."

ஆபேல் தேவன் மீது கொண்ட விசுவாசத்தினால், தேவனை பிரியப்படுத்தும் பலியை செலுத்தினார். ஏனோக்கு தேவனோடு நடக்கிறவராகவும், நோவா தேவன் சொன்னவைகளை காணாவிடினும், கண்டதுபோல செயல்படுகிறவராகவும் இருந்து தேவனை பிரியப்படுத்தினார்கள். அவர்களது விசுவாசம், தேவனே அவர்கள் செயல்களைக் குறித்து சாட்சி கொடுத்ததிலிருந்து இதை நாம் தெளிவாக காணமுடிகிறது.

நம்மில் அநேகருக்கு விசுவாசம் என்பது, தேவன் நாம் விரும்புகிற எல்லாவற்றையும் நமக்கு கொடுத்து, நம்மை பிரியப்படுத்துவதாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதாவது, நான் தேவன் மேல் கொண்ட விசுவாசத்தினால், அவர் எனக்கு வேண்டியவைகளை செய்து, என்னை மகிழ்ச்சி கடலில் திளைக்கவைத்து, என்னை பிரியப்படுத்துவார் என்பதாக இருக்கிறது. ஆனால், விசுவாச வீரர்களாகிய நம் முன்னோர்கள், விசுவாசம் என்பது தேவன் நம்மை பிரியப்படுத்துவது அல்ல, மாறாக, நாம் தேவனை பிரியப்படுத்துவது என்பதை செயல் விளக்கப்படுதினார்கள்.

## 3. விசுவாசம் என்பது, தேவனுக்கு கீழ்படிவதாக இருக்கிறது

**எபி 11:8–12** "விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுபோனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள். ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்."

ஆபிரகாம் ஏன் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறார்? அவர் தேவனுக்கு கீழ்படிந்தார் என்பதால் தான். எங்கே போகிறோம் என்று தெரியாமல், தேவன் எங்கெங்கு போகச்சொன்னாரோ அங்கெல்லாம் சென்றார். தேவன் செய்ய சொன்ன எல்லாவற்றிற்கும் மறுப்பேதும் சொல்லாமல், அது தனக்கு வலியையும், தூக்கத்தையும் கொடுப்பதாக இருந்தாலும் மனப்பூர்வமாக கீழ்படிந்தார். அவரது மகன் இஸ்மவேலை துரத்துவதாக இருந்தாலும், அவரது வாரிசு, ஏக புதல்வன் ஈசாக்கை பலியிடுவதாக இருந்தாலும் சரி. ஆபிரகாமை

பொறுத்தவரை தேவன் சொல்வது எதுவாயினும் அதற்கு அப்படியே கீழ்ப்படிவதாகும். ஆனால், நம்மில் பெரும்பாலனவர்களுக்கு விசுவாசம் என்பது நாம் சொல்வதை கர்த்தார் செய்வதாக இருக்கிறது. வேலை கேட்டால் வேலை தேடி தரணும். திருமண மாப்பிள்ளை கேட்டால், மணம் பெண்ணைக் கேட்டால், தேவன் உடனே அதை செய்து கொடுக்கணும். இல்லாவிட்டால், நான் அவரை விசுவாசித்து என்ன பயன்? நான் சொல்கிற எதையும் அவர் எனக்கு செய்வதில்லை என்ற முறுமுறுப்பு முளைத்து, அவிசுவாசத்தை விளையச் செய்கிறது.

தேவன் நமக்கு கீழ் படிவதில்லை; அதாவது, நாம் ஜெபிப்பதை கேட்டு அவர் நமக்கு செய்து கொடுப்பது அல்ல; மாறாக, நாம் தேவனுக்கு கீழ்படிவதாக இருக்க வேண்டும். என்பதை நினைவில் கொள்வோம். விசுவாசம் என்பது செயல்படாமல் இருப்பதில்லை; விசுவாசம் செயல் துடிப்புள்ளதாக இருக்கிறது. "விசுவாசம் கீழ்படிதலாக உள்ளது."

### 4. விசுவாசம் என்பது, நிறைவான பலனை எதிர் நோக்கிறதாயிருக்கிறது

**எபி 11:13–16** "இவர்கலெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல். தூரத்திலே அவைகளைக் கண்டு. நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிநவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனெனன்ப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே."

விசுவாசம் என்பது நமது நிகழ்கால சூழ்நிலையை கடந்து, நிறைவான பலனை எதிர்நோக்குகிறது. அதாவது இம்மைக்காக (இந்த உலகத்திற்காக) தேவனை சார்ந்திருக்காமல், மறுமைக்காக (பரலோகத்திற்காக) தேவனை சார்ந்து வாழ்வது ஆகும். விசுவாச செயல் வீரர்கள் இந்த அற்ப கால ஜீவியத்திற்காக தேவனை தேடவில்லை, மற்றும் அவரை சார்ந்திருக்கவில்லை என்பதை, அவர்கள் தங்கள் மனதை, தேவன் தங்களுக்கு கொடுத்த பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் மேல் வைக்காததிலிருந்து அறிந்துக்கொள்ள முடியும் **(எபி 11:13–22).**

இந்த பூமிக்கு அந்நியராக, பரதேசியைப் போன்று ஒரு வாழ்க்கை வாழ்ந்ததிலிருந்து அவர்கள் தேவன் மீது கொண்ட விசுவாசம் நித்திய ஜீவனுக்கானது என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது. நாம் எதற்காக கிறிஸ்துவை சார்ந்திருக்கிறோம்? தேவனிடம் நாம் எதற்காக விசுவாசமாக இருக்கிறோம்? வேலை, பணம், வசதி, அதிகாரம், அந்தஸ்து மற்றும் இவ்வுலகை சார்ந்த காரியங்களுக்காகவா? அல்லது பரிசுத்தம், இரட்சிப்பு, சபை மற்றும் பரலோகம் போன்றவைகளுக்காகவா?

இம்மைக்காக என்றால் நாம் மிகவம் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். மாறாக, மறுமைக்காக என்றால் பாக்கியவான் களாயிருப்போம். **1 கொரி 15:19** "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்."

### 5. விசுவாசம் என்பது ஞானமான முடிவுகளை மேற்கொள்ள நமக்கு உதவுகிறது.

**எபி 11:23–28** "மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்தது, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்."

விசுவாசம் என்பது, கடினமான முடிவுகளை நாம் மேற்கொள்ளும்போது, மிகச்சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்களாக்குகிறது. மோசேயின்

பெற்றோர்கள், தங்கள் பிள்ளையைக் கொலை செய்யும்படி விட்டுவிடுதல் அல்லது, ஒளித்து வைத்து பாதுகாப்பதா என்பவற்றில் ஒன்றை முடிவு செய்ய வேண்டியதாயிருந்தது. இஸ்ரவேல் மக்கள் தங்கள் வீடுகளின் கதவுகளிலும் நிலைகளிலும் மிருக இரத்தத்தை பூசுவதா? அல்லது வேண்டாமா? என முடிவுசெய்ய வேண்டியிருந்தது. இவைகள் கடினமான முடிவாக இருந்தாலும், அவர்கள் சரியான முடிவை தேர்வு செய்தனர். அவர்கள் விசுவாசம் அதற்கு உதவியாக இருந்தது.

மோசே அநித்தியமான பாவ சந்தோஷங்களை வெறுத்து ஒதுக்கி, தேவனுடைய மக்களோடே துன்பங்களை அனுபவிப்பதை தெரிந்துக்கொள்ள வழிநடத்தியது. இன்றைய நாட்களில் நாமும் இதே போன்று ஞானமான தீர்மானங்களை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும், மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் நம்மில் போராட்டம் கொள்ளும்போது **(கலா 5:16)**, நாம் எதை சார்ந்து தீர்மானம் செய்கிறோம். விசுவாசத்தை சார்ந்து தீர்மானித்தால், அது நம்மை ஞானமான முடிவுகளை நோக்கி வழிநடத்தும் என்பது நிச்சயமானது **(ரோமர் 8:13–14)**.

### 6. விசுவாசம் என்பது நம்மை வெற்றியாளர்களாக்குகிறது

**எபி 11:29–31** "விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்து போவதுபோலக் கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத்துணிந்து அமிழ்ந்துபோனார்கள். விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது. விசவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்."

தேவன் மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் என்பது, நம் வாழ்வின் தடைகள் அனைத்தையும் நம்மை வெற்றிக்கொள்ள வைக்கிறது. அதனால் நாம் வெற்றியாளர்களாகிறோம். **1 யோவான் 5:4** "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."

வெற்றி என்பது நமது சொந்தப் பலத்தினால் வருவதில்லை; தேவனுடைய பலத்தின் மூலமாகவே வருகிறது. இஸ்ரவேல் மக்கள் பெற்றுக்கொண்ட வெற்றிகள் அவர்களது பலத்தினால் அல்ல, மாறாக தேவனுடைய பெலத்தினால் தான் என்பதே சத்தியமாயிருக்கிறது. **நீதி 21:31** "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்."

அநேகர் விசுவாசத்தின் மீது விசுவாசம் கொள்கின்றனர்; நான் விசுவாசிக்கிறதினால் இது நடக்கும் என்று கூறுகின்றனர். ஆனால், தேவன் என் கூட இருப்பதினால் இது கைகூடும் என்பதே வெற்றிக்கொள்வதற்கான விசுவாசமாயிருக்கிறது. இந்த மாபெரும் விசுவாசத்தை தாவீது, கோலியாத்தை வெற்றிக்கொண்டதிலிருந்து நாம் தெளிவாக அறியமுடியும் **(1 சாமு 17)**.

### இறுதியாக,

பிரியமானவர்களே! ஆகையால், விசுவாசத்தின் இயல்பு என்பது உடல் ரீதியாகக் காண இயலாதவற்றை ஏற்றுக் கொள்கிறது. நாம் தேவனைப் பிரியப்படுத்தும்படி செய்கிறது, தேவனுக்கு கீழ்படிவதாக இருக்கிறது, நிறைவான பலனை எதிர்நோக்குகிறதாயிருக்கிறது, ஞானமான முடிவுகளை மேற்க்கொள்ள நமக்கு உதவுகிறது. மற்றும், விசுவாசம் என்பது நம்மை வெற்றியாளர்களாக்குகிறது. நாம் கொண்டிருக்கிற விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? விசுவாச வீரர்களை போன்றதா? நம்மை நாமே நிதானித்து அறிந்து விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய கிறிஸ்துவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்திலே ஓடி **(எபி 12:1)**, விசுவாச செயல்வ வீரர்களைப் போல செயல்படுவோம். எல்லாம் வல்ல தேவன் இந்த தெய்வீக முயற்சியில் உதவி செய்வாராக!

### சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. Mrs. P. இந்திரா – திருமங்கலம்
2. P. சூரிய பிரியா – திருமங்கலம்

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. M. ஜோனாத்தான் – கரூர்
2. M. ராஜா – கரூர்

# அடிப்படை கிறிஸ்தவ பண்புகள்

பிரியமானவர்களே உங்கள் அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துகிறேன். **எபிரெயர் 13-ம்** அதிகாரத்திலிருந்து, ஒரு கிறிஸ்தவனிடம் இருக்க வேண்டிய அடிப்படையான பண்புகளைப் பற்றி அறிந்துகொள்ள நம் மனதை ஆயத்தப்படுத்த வேண்டும்.

எபிரெயர் புத்தகத்தில் 13 அதிகாரங்கள் உள்ளன. இதில் குறிப்பாக 13-ம் அதிகாரம், மற்ற 12 அதிபாரங்களை விட, கிறிஸ்தவர்கள் தொடர்ந்து செய்ய வேண்டிய பல செயல்முறைகளை வழியுறுத்துகிறது. எனவே, இது மற்ற 12 அதிகாரங்களை விடவும் சிறப்பானதாகும்.

1. கிறிஸ்தவர்களாகிய நம்மை உலகத்திலிருந்து வேறுபடுத்தி காட்டுவது, எல்லோரிடமும் சமமாக அன்பு கூறுகிற பண்பாகும். ஏனென்றால் உறவு, குடும்பம் இவையெல்லாவற்றையும் கடந்து தோழமை சார்ந்து, ஆழமான நேசத்தை கிறிஸ்துவைப் போல காட்டுவதாகும். **மத் 22:39: யோ 13:44** இந்த இரண்டு வசனங்களில் ஆண்டவர் இயேசு அன்புகூறுவதின் முக்கியத்துவத்தை கட்டளையாகவே பகிர்ந்தளிக்க முயற்சி செய்வோம்.

2. பொதுவான உலகில், தெரிந்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று இப்படி அடிக்கடி பழக்கப்பட்ட மக்களுடனே மாத்திரம் உபசரிப்பு என்பது இருக்கும். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நம்மிடமோ, இயேசுவானவர், அந்நியரை உபசரித்து, திக்கற்றப்பிள்ளைகள் மற்றும் விதவைகளை விசாரிப்பது போன்ற பண்புகளை எதிர்ப்பார்க்கிறார். **யாக் 1:27: ரோ 12:13: கலா 6:10: ஆதி 18:1-10** – அந்நியரை உபசரித்ததினால் ஆசீர்வாதம் பெற்ற ஆபிரகாம்.

3. அநேக நேரங்களில் நம்முடைய ஜெபங்கள் பொதுவாக, நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் மையமாக வைத்தே கோருவதாக இருக்கும். ஆனால், நம்முடைய இரட்சகராகிய இயேசு ஆண்டவர் பூமியில் வாழ்ந்த போது, அவருடைய ஜெபம் வியாதியுள்ளவர்களுக்காகவும், கஷ்டத்தின் மத்தியிலும், வேதனையிலும் வாழும் மனிதர்களுக்காகவும், தேவையுள்ளவர்களுக்காகவும் மரண படுக்கையில் உள்ளவர்களுக்காகவும் பாரத்தோடும் கண்ணீரோடும் ஜெபிக்கும் ஜெபமாக இருந்ததை நம்மால் வேதத்தில் வாசிக்க முடிகிறது. **யாக் 5:14.**

4. கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வது அவசியம். ஏனென்றால், நாம் பரிசுத்தமாய் வாழ்வதற்கு மாத்திரமே அழைக்கப்பட்டிருக்கிறோம். எனவே நாம், நம்முடைய சொல்லிலும், செயலிலும், சிந்தையிலும் தேவையற்ற தேவன் விரும்பாத உலகம் சார்ந்த சிந்தைகளை களைந்து, தேவன் விரும்புகிற பரிசுத்தம் சார்ந்து சிந்திக்க முயற்சி செய்வோம். **1 பேதுரு 1:15,**

5. தேவையற்ற உலகம் சார்ந்த இச்சையுள்ளவர்களாய் வாழாமல், நமக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுகிற நிறைவான வாழ்க்கை வாழ கற்றுக்கொள்வோம். **1 தீமோ 6:6-8** வசனங்களில் நமக்கு தேவன் கொடுத்தவைகள் போதுமென்று வாழுகிற மனதை நாம் வளர்த்துக் கொள்ளும்போது, தேவனுடைய பார்வையில் அது மிகுந்த ஆதாயமுள்ளதாகவே தெரிகிறது. அப்படியில்லையென்றால், நாம் பண ஆசையினால் இழுக்கப்பட்டு, எல்லாவற்றையும்

**இலங்கையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களில் தங்கள் குடும்பத்தாரையும், உறவுகளையும் இழந்து தவிக்கும் அன்பு உள்ளங்களின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்!**

இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவிப்போவோம்.

6. விசுவாச பட்டியலில் இடம்பெற்றுள்ள அநேகரை நாம் எபிரெயர் புத்தகத்தில் 11-ம் அதிகாரத்தில் காண முடியும். இவர்களெல்லாரும், உலக ஆதாயங்களை இழந்து தேவனுக்காக மாத்திரம் அவரையே முழுமையாக நம்பி வாழ்ந்தார்கள். அதனால், அவர்கள் இழந்ததைப் பார்க்கிலும் அதிகதிகமாக தைரியத்தையும், அதனோடு கூட அவர்கள் இழந்தவைகளையும் பெற்றுக்கொண்டார்கள். அது மட்டுமில்லாமல், தேவன் அவர்களோடே கூட இருந்ததினால், எந்த சூழ்நிலையிலும் அவர்கள் விழுந்து போகாதப்படிக்கு தேவன் அவர்களை வழிநடத்தினார். நாமும் தேவனை நம்பி வாழும்பொழுது, சாத்தானின் சோதனைகளையும், உலக இச்சைகளையும் எதிர்த்து நிற்க தேவன் தைரியம் கொடுப்பார்.

7. கடைசியாக, சபையின் ஊழியருக்கு நாம் எல்லாச் சூழ்நிலையிலும் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் நம்மை ஆவிக்குரிய வழியில் வளரவும், நம்முடைய தவறான பாதைகளை சுட்டிக்காட்டுகிறவர்களாகவும் சரி செய்கிறவர்களாகவும் இருக்கிறபடியால் , அவர்களுக்கு கீழ்படிவது அவசியமானதாகும். மேலும், சத்தியத்தின்படி பார்த்தால் நம்முடைய ஆவிக்குரிய தகப்பனாயிருப்பவர்கள் அவர்களே! எனவெ ஒரு பிள்ளை, தன்னுடைய மாம்ச சம்பந்தமான தகப்பனுக்கு எல்லாவற்றிலும் கீழ்படிவது போல், நாமும் நம்முடைய ஆவிக்குரிய தகப்பனாயிருக்கிற ஊழியக்காரர்களுக்கு எல்லா காரியங்களிலேயும் கீழ்படிய கடனாளிகளாயிருக்கிறோம்.

ஆகவே, எனக்கு பிரியமானவர்களே! நாம் தியானித்த இந்த ஏழு குறிப்புகளிலும், கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையான, அவசியமான செயல்முறைகளைப் பற்றி படித்தோம். இக்காரியங்களை நாமும் நம் வாழ்வில் பயிற்சி செய்தோமானால், நிச்சயமாக நாம் விசுவாச வீரர்களாக மாறுவதற்கு ஏதுவுண்டு. எனவே, இச்செயல்முறைகளை நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில் பயிற்சி செய்வோம்! தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தை பெறுவோம்! தேவன் இந்த முயற்சியில் உதவிசெய்வாராக!

அன்புடன்

உங்கள் அண்ணன் - **J.P**

## சிறுவர் பகுதி


## ஈசாக்கு

ஹாய் செல்லக் குட்டீஸ்! உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே ஸ்தோத்திரங்களை சொல்லிக்கொள்கிறேன். இந்த கோடைகால விடுமுறையை நீங்கள், VBS சென்று சிறப்பாக களித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

சரி, வாங்க செல்லங்களா! இந்த மாதம் எபிரெயர் புத்தகத்தில் விசுவாச பட்டியலில் இடம் பெற்ற ஈசாக்கு என்பவரைப் பற்றி தெரிந்துக்கொள்ளலாமா?

விசுவாசத்தின் தந்தை யார் என்று தெரியுமா? உங்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். ஆம்! அது ஆபிரகாம் தான். அவருடைய மகன் தான் ஈசாக்கு.

ஈசாக்கு வாழ்ந்த நாட்டில் பஞ்சம் வந்தது. உணவு இல்லாமல், தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் தவித்தனர். ஈசாக்கு தன் மனைவி பிள்ளைகளுடன் கேரார் என்னும் ஊருக்கு போய் அங்கே விவசாயம் செய்தார். தேவன் அதை ஆசீர்வதித்தார். அது நூறு மடங்கு பலனை தந்தது. அவன் பெரிய பணக்காரனானான்; நிறைய ஆடு மாடுகள் மற்றும் வேலைக்காரர்கள் இருந்தனர். இதனை கண்ட அந்த ஊரார், அவன் மேல் பொறாமைக் கொண்டு, அவன் வெட்டின கிணற்றை பிடுங்கிகொண்டு, அவனை ஊரைவிட்டு துரத்திவிட்டனர்.



பிறகு, பள்ளதாக்கான இடத்திற்கு சென்று கிணறு வெட்டினான். அதையும் அவர்கள் பிடுங்கி கொண்டு துரத்தினர். பிறகு வேறிடம் சென்றான் அங்கேயும் அதேப்போல் செய்தனர். இப்படியே பல இடங்களுக்கு அவனை துரத்தினர். பிறகு அவன் பெயர்செபா என்ற ஊருக்கு சென்று, அங்கே ஒரு பலிபீடத்தை கட்டி தேவனை வணங்கினான். அங்கே ஒரு கிணறை வெட்டினான்; அங்கேயும் தேவன் அவனை

ஆசீர்வதித்தார். அதனால் அந்த நாட்டு அரசன் பயந்து, ஈசாக்குடன் தேவன் இருக்கிறார் என்பதை அறிந்து, அவனோடு சமாதானம் செய்துக்கொண்டான்.

குட்டீஸ்! ஈசாக்கு, தேவன் மேல் கொண்ட விசுவாசத்தினால், அவனுடையவைகளை மற்றவர்கள் பறித்த போதும் அதை பற்றி கவலைபடாமல், உடைமைகள் அல்ல, தேவன் தான் வாழ வைப்பார் என்று அவைகளை இழந்ததினால், தேவன் அவன் சென்ற இடமெல்லாம் அவனை ஆசீர்வதித்து விருத்தியாக்கினார். நாமும் ஈசாக்கைப்போல தேவனை விசுவாசிப்போம். தேவன் நாம் இருக்கின்ற இடத்தில் நம்மை ஆசீர்வதித்து விருத்தியாக்குவாராக.

**மனை வசனம் : மத்தேயு 4:4**

"மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."

– ஏஞ்சலின் கமலம்

# ஆபேல்

ஹாய் குட்டீஸ்! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம் ஆபேல் என்பவரைப் பற்றி கற்றுக்கொள்வோம்.

அது சரி, யார் இந்த ஆபேல்? தேவன் படைத்த முதல் மனிதன் ஆதாமிற்கும், மனுஷி ஏவாளிற்கும் பிறந்த இரண்டாவது மகன் தான் இந்த ஆபேல். மூத்த மகன் பெயர் காயீன். ஆபேல் ஆடுகளை மேய்கிறவனாகவும், காயீன் விவசாயம் செய்கிறவனாகவும் இருந்தனர்.

சில நாட்கள் சென்ற பின்பு, இருவரும் தேவனுக்கு காணிக்கை கொண்டு வந்தனர். காயீன் பழங்களையும், ஆபேல் நல்ல கொழுத்த முதல் பிறந்த ஆட்டுக்குட்டிகளையும் கொண்டு வந்து கொடுத்தனர். தேவன் ஆபேலுடைய பலியை ஏற்றுக்கொண்டார்; காயினுடைய பலியை ஏற்கவில்லை.



ஏன் ஏற்கவில்லை? யாராவது பழங்களை கொண்டு வந்து கடவுளுக்கு பலி கொடுப்பாங்களா?, பலி என்பது மிருக ஜீவன்களைக் கொண்டு கொடுப்பது தான் அல்லவா? காயினுடைய இந்த கீழ்படியாத குணத்தினால் தான் கடவுள் ஏற்கவில்லை.

ஆனால், காயீன் தான் செய்த பாவத்தை உணராமல், தன் தம்பியாகிய ஆபேலை கொலை செய்தான். அதனால் தேவன் அவனை தண்டித்தார். அவன் சபிக்கப்பட்டவனான்.

ஆபேலோ விசுவாசத்தினால், தேவனுக்கு கீழ்படிந்து மேன்மையான பலியை செலுத்தினார். அவனுடைய பலியை பற்றி தேவனே சாட்சி கொடுத்தார். ஆபேல் மரித்து ஏறக்குறைய 6000 ஆண்டுகள் ஆகியும், இன்றும் அவரைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம். காரணம் அவரது விசுவாசமுள்ள கீழ்படிதல் நிறைந்த செயல்தான். அதனால் தான் அவர் மரித்தும் இன்றும் நம்மிடம் பேசிக்கொண்டிருக்கிறார். "என்னைப் போல நீங்களும் தேவனுக்கு சிறப்பானதை கொடுங்கள். தேவனே சாட்சி சொல்லும்படி வாழுங்கள்" என்று ஆபேல் பேசுவதை கவனியுங்கள். நாமும் ஆபேலை போல செய்யலாமா? அதற்கு நாம் தேவனையும் அவரது சபையையும் முதன்மைப்படுத்தி வாழ வேண்டும். நான் ரெடி! நீங்க ரெடிதானே?

**மனைவசனம் : மத்தேயு 6:33**

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்."

– குயினி பிரதீப்

## சிறுவருக்கான கேள்விகள்

1. ஈசாக்கியம் உள்ளதை பிடிங்கிகொண்டு, துரத்திவிட்ட போது என்ன செய்தார்?
2. ஈசாக்கை தேவன் எவ்வளவு மடங்கு ஆசீர்வதித்தார்?
3. காயினுடைய பலியை தேவன் ஏன் ஏற்கவில்லை?
4. ஆபேலுடைய பலி எப்படிப்பட்டது?

## மே மாதக் கேள்விகள்

1. ஆத்தும ஈடறே என்ன செய்ய வேண்டும்?

2. நம்ப படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயம் எது?

3. உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் எது?

4. தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறவர்கள் யாராக இருக்கிறார்கள்?

5. மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது ஏன்?

6. கீழ்படியாதவர்களோடே சேதமாகாதிருந்தவன் யார்?

7. உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள் என வாசிப்பதெங்கே?

8. தன் வழிகளில் தாறுமாறானவனோ யாரை அலட்சியம் செய்கிறோம்

9. ஆண்டவர் இயேசு, ஏன்? உலகம் நம்மை பகைக்கிறது என்கிறார்?

10. நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் எப்படி ஓடவேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-06-2019**


அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431


### சென்ற இதழ் பதில்கள்


| | |
|---|---|
| 1. மத் 9:13 | 6. 1கொரி 1:24 |
| 2. 1யோ 1:3 | 7. எபே 4:1 |
| 3. 1தெச 4:7 | 8. 2 பேதுரு 1:3 |
| 4. சங் 1:2 | 9. 1பேதுரு 5:10 |
| 5. ரோ 8:28 | 10. எபி 3:1 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
2. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
3. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
4. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
5. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
6. Mrs. ஹெலன் திலக் – மதுரை
7. Mrs. ரேச்சல் தமிழரசி – பசுமலை
8. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. Mrs. M. ஈஸ்வரி – கரூர்
11. Mrs. P. இந்திரா – திருமங்கலம்
12. J. செல்வி ஜெயராணி - நாமக்கல்
13. Mrs. P. சூரிய பிரியா – திருமங்கலம்
14. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – ஒத்தக்கடை
15. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
16. Mrs. G. ஏஞ்சலம்மாள் – ஒத்தக்கடை
17. Mr. J. விஜய் – ஒத்தக்கடை
18. R. சரோஜா – தென்கலம்
19. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
20. Mrs. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுவை
23. Mrs. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
24. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
25. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
26. Mr. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
27. Mrs. P. லீலா ஜோசப் – கோவை
28. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியர் – கடலூர்
30. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
31. Mrs. ஹெப்சிபா தாமஸ் – சென்னை
32. Mrs. டேவிட் சாந்தகுமார் – திருநெல்வேலி
33. Mr. D. குளோரி திலகவதி – ஈரோடு
34. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
35. Mrs. ராணி சாந்தக்குமார் – மதுரை
36. Mrs. S. ஜெயராஜ் – கோயம்புத்தூர்
37. Mrs. D.I. அன்பு சுதந்திரம்
38. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
39. Mrs. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# சென்றமாதம் நடைபெற்ற ஊழியங்களில் சில






மதுரை அரசரடியில் கிறிஸ்துவின் சபையில் பெரியவர்களுக்காக நடைபெற்ற VBS வகுப்பில் நமது ஆசிரியர் செய்தியளித்த போது, பங்குபெற்றோர்






மதுரை திருவாதவூரில் கிறிஸ்துவின் சபையில் சிறுவர்களுக்கான VBS வகுப்புகள் நடைபெற்ற போது..



VBS வகுப்புகளில் கலந்து கொண்ட சிறுவர்கள்



திருமுழுக்கிலே வசனத்திற்கு கீழ்படிந்த சகோதரி, சகோதரன்





இம்மாதம் ஏழை பார்வையற்ற சகோதர, சகோதரிகளுக்கு அரிசி வழங்கப்பட்டது...

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th May 2019
Posted at Arasaradi HPO on 10th, 11th May 2019

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
92 4421 4421, 92 4431 4431

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To